சென்னை வடக்கு மாவட்டக் கழகம் சார்பில்

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினிடம் ரூ.1 கோடி தேர்தல் நிதி!

மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.டி.சேகர் வழங்கினார்!

சென்னை, ஜூலை 6- கழக இளைஞர் அணிச் செயலாளர்- துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞர் அணிச் செயலாளராக பொறுப்பேற்று, ஏழாவது ஆண்டில் அடி எடுத்த வைத்த நாளில் (04/07/2025) சென்னை வடக்கு மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைகள், கலைஞர் நூலகங்களைத் திறந்து வைத்தல் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்.

தமிழ்நாட்டின் தலைமகன் பேரறிஞர் அண்ணா அவர்களின் மணி விழாவின்போது, 1970-ஆம் ஆண்டு, தமிழ்நாடு முழுவதும் 60 சிலைகளை முத்தமிழறிஞர் கலைஞர் அமைத்தார். அதில், சென்னை ராயபுரத்தில் அமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணாவின் சிலை தற்போது புதுப்பிக்கப்பட்டு, அருகிலேயே முத்தமிழறிஞர் கலைஞருக்கும் சிலை எழுப்பப்பட்டுள்ளது.

இரு தலைவர்களின் திருவுருவச் சிலையை இளைஞர் அணிச் செயலாளர்- துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வின்போது, சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், கழகத்திற்கு தேர்தல் நிதியாக ரூ.1 கோடி வழங்கினார். தேர்தல் நிதியைப் பெற்றுக் கொண்ட கழக இளைஞர் அணிச் செயலாளர், "மாநிலத்திலேயே முதல் மாவட்டமாக ஒரு கோடி ரூபாய் தேர்தல் நிதி வழங்கி, மற்ற மாவட்டக் கழகங்களுக்கு எல்லாம் முன்னுதாரணமாக சென்னை வடக்கு மாவட்டக் கழகம் திகழ்கிறது" எனப் பாராட்டினார்.

அதனைத்தொடர்ந்து, பெரம்பூர், ராயபுரம் , ஆர்.கே நகர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகங்களை திறந்துவைத்தார்.

அதேபோல, ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.ஜெ.எபினேசர் ஏற்பாட்டில், அமைக்கப்பட்ட தையல் பயிற்சி, கணினிப் பயிற்சி மையம், கழக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பாக, ஆர்.கே. நகரில் அமைக்கப்பட்ட கேரம் விளையாட்டுப் பயிற்சி மையத்தையும் திறந்துவைத்து சிறப்பித்தார்.

வருகிற 15 ஆம் தேதி

"உங்களுடன் ஸ்டாலின்" முகாம் : சிதம்பரத்தில் முதல்வர் தொடங்கி வைக்கிறார்!

நவம்பர் வரை அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும்!

சென்னை, ஜூலை 6- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு சட்டமன்ற பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவக்கப்படும் என அறிவித்திருந்தார்.

முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில், "உங்களுடன் ஸ்டாலின்" என்ற திட்டம் துவக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 10,000 சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் நடத்தப்படும் முதல் முகாமினை, வரும் 15.07.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைக்க உள்ளார். இந்தத் திட்டம் ஜூலை 15 முதல் நவம்பர் மாதம் வரை அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும்.

தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள்/திட்டங்களை அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் நகர்புறப் பகுதிகளில் 3,768 முகாம்களும் ஊரகப் பகுதிகளில் 6,232 முகாம்களும் நடைபெறும். இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும். அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க, மருத்துவ முகாம்களும் நடத்தப்படும்.

இத்திட்டத்தின் கீழ், தன்னார்வலர்கள், ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாகச் சென்று, முகாம் நடைபெறும் நாள், இடம் குறித்த விவரங்கள், அங்கு வழங்கப்படவுள்ள பல்வேறு அரசு துறைகளின் திட்டங்கள்/சேவை களை விவரித்து, அவற்றில் பயனடைவதற்கான தகுதிகள், தேவைப்படும் ஆவணங்கள் குறித்து தெரிவிப்பதோடு தகவல் கையேட்டினையும், விண்ணப்பத்தினையும் வழங்குவர்.

மேலும் இந்த முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று தங்கள் விண்ணப்பத்தினை அளிக்கலாம். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் மட்டுமே வழங்கப்படும்.

இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இத்திட்டம் குறித்த விபரங்களை பொதுமக்களுக்கு முறையாக தெரிவிப்பதற்காக, "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் தன்னார்வலர்கள் மூலம் வீடு வீடாக சென்று விண்ணப்பம் மற்றும் தகவல் கையேடு வழங்கும் பணி, 07.07.2025 முதல் தொடங்க உள்ளது. இந்தப் பணி மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக நடைபெறும். இப்பணிக்காக சுமார் 1 லட்சம் தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தில் உங்கள் பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் வரவேற்புரை! க.செல்வம் எம்.பி. முன்னிலை!

திருப்போரூர் பேரூர் தி.மு.க. செயலாளர் மு.தேவராஜ் இல்லத் திருமண விழா! துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைக்கிறார்!

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - ஆர்.எஸ்.பாரதி பங்கேற்பு!

காஞ்சிபுரம், ஜூலை. 06 - கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாசியுடன், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்போரூர் பேரூர் தி.மு.க. செயலாளர், பேரூராட்சி மன்றத் தலைவர் மு. தேவராஜ் - பேரூராட்சி மன்ற தலைவர் செல்வி தேவராஜ் ஆகியோரின் புதல்வர் காஞ்சிபுரம் மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் தே.செங்குட்டுவனுக்கும், உத்திரமேரூர் செ. மதிவாணன் - ம.கீதா ஆகியோரின் புதல்வி ம.பிரித்திகாவிற்கும் திருமண விழா நாளை (07.07.2025 - திங்கட் கிழமை) மாலை 9 மணிக்கு மேல், திருப்போரூர், கால வாக்கம் ஓ.எம்.ஆர். சாலையில் அமைந்துள்ள சைதன்யா திருமண மஹாலில் நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

திருமண விழாவில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, திருப்போரூர் வடக்கு ஒன்றியச் செயலாளர், ஒன்றியப் பெருந்தலைவர் எஸ்.ஆர். எல்.இதயவர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, ஜி.சி.அன்புச் செழியன், மாவட்டப் பொருளாளர் வெ.விசுவ நாதன், தெற்கு ஒன்றிய செயலாளர் பையனூர் சேகர், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் ஆர்.டி.அரசு, திருக்கழுக்குன்றம் பேரூர் செயலாளர், பேரூராட்சித் தலைவர் ஜி.டி.யுவராஜ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வீ.விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமை யேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்து கிறார்.

திருமண விழாவில் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி, கழக அமைப்புச் செயலாளர் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி, மீ.அ. வைதியலிங்கம், எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, இ.கருணாநிதி எம்.எல்.ஏ,

வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ, பனையூர் மு. பாபு எம்.எல்.ஏ, த.துரைசாமி, து.மூர்த்தி, பெ.விஸ்வநாதன், படப்பை ஆ.மனோகரன், மல்லை இ.சத்யா, வன்னியரசு, க.வசந்தகுமாரி, செம்பருத்தி துர்கேஷ், கோ.காமராஜ், க.அன்புசெல்வன், ஆதிமாறன், சூ.க.விடுதலைச் செழியன், எஸ்.எம்.கே.அண்ணாதுரை, அ.தமிழ்மாறன், இ.சங்கர், பூ.லோகநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

கா.மணிகண்டன் தலைமை! ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை எம்.சி. - கோ.சு.மணி முன்னிலை!

தியாகராயர்நகர் கிழக்கு பகுதி இளைஞரணி சார்பில் கழக அரசின் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம்!

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி.-பா. ஸ்ரீலேகா சிறப்புரை!

சென்னை, ஜூலை 6 - சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்கு பகுதி இளைஞரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் கழக அரசின் 4 ஆண்டு சாதனை விளக்கப் தெருமுனைக் கூட்டம் இன்று (06.07.2025 - ஞாயிற்றுக் கிழமை) மாலை 6 மணிக்கு, அசோக்நகர், 81 வது தெருவில் நடைபெறுகிறது.

தியாகராயர்நகர் கிழக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் கா.மணிகண்டன் தலைமை வகிக்கிறார்.

தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி, 135 (அ) வட்டக் கழகச் செயலாளர் மு.செல்வகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ்.உமாசங்கர், எ.அஸ்வின்குமார், டேன்டி பிரகாஷ், தினேஷ் மாணிக்கம், த.விக்னேஷ்வரன், ஆ.மணிரத்தினம், ஜி.அருண்குமார், கி.விக்னேஷ்குமார், ப. கணேஷ், ஞானபாலாஜி, ஆர்.கே.ராஜ்குமார், சி. ஆனந்தராஜ், பெ.அஜித்குமார், ர.பாபு, ஆ.ராகுல் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., கழக துணை அமைப்புச் செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், தலைமை கழக இளம் பேச்சாளர் பா.ஸ்ரீலேகா கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் தூத்துக்குடி எஸ்.ஜோயல், கிழக்கு பகுதிச் செயலாளர், தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, மேற்கு பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., தியாகராயர்நகர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் எம்.எஸ். பழனி, வழக்கறிஞர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மு.ம.செந்தில்குமார், ஜி.பி. செந்தில்குமரன், ஆர்.சக்திவேல், லலிதாபுரம் என். துரை, எஸ்.லட்சுமிகாந்தன், வழக்கறிஞர் டி.கமல், தட்சன் ஹரிஹரன், ந.மோ. முரளி, கே.எஸ்.வெல்டிங் ராஜா, பி.ஜெய்குமார், பி. மாரி, கார்த்திகா பாஸ்கர் எம்.சி, கோமதி மணிவண்ணன் எம்.சி. மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வி.வினோத், மா.தேவராஜ், இரா.குருள்அரசன், ஆர்.மணிகண்டன், எஸ். தினேஷ் ஆகியோர் நன்றி உரையாற்றுகின்றனர்.

ஒன்றியச் செயலாளர் நா.பரிமளம் முன்னிலையில் – கும்முடிப்பூண்டி கிழக்கு ஒன்றியம்

எஸ்.ஆர்.கண்டிகையில் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை!

கதிரவன் – ஆரணி எஸ். ரோஸ் பொன்னையன் பங்கேற்பு!

திருவள்ளூர், ஜூலை 6 - திருவள்ளூர் கிடிக்கு மாவட்டத்தில் கும்மிடிபூண்டி கிழக்கு ஒன்றியத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் உத்தரவுப்படி, தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்கவும் திராவிட மாடல் நல்லாட்சி தொடரவும் "ஓரணியில் தமிழ்நாடு " என புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணியை திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் ஆலோசனைப்படி, கும்முடிப்பூண்டி கிழக்கு ஒன்றியம் எஸ்.ஆர். கண்டிகை கிராமத்தில்3.7.2025 அன்று "ஓரணியில் தமிழ்நாடு" திமுக உறுப்பினர் சேர்க்கையை ஒன்றியச் செயலாளர் நா.பரிமளம் முன்னிலையில் மாவட்ட துணைச் செயலாளர் கதிரவன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ். ரோஸ் பொன்னையன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் கவுண்சிலர் எம்.ஜெயசந்திரன், மாவட்டபிரதிநிதி எஸ். காலத்தி, ஒன்றிய துணைச் செயலாளர் ரவி, IT wing ஒருங்கிணைப்பாளர் மு. குமார், ஆர்.சுதாகர், ஜெ. ரமேஷ்குமார், உமாபதி, எஸ். பாஸ்கர்,

எஸ்.ராகவய்யர், டி.முனிசேகர், கே.பிரபாகர், ஏ.கே.முரளி, ராஜா, சரத்குமார், ஐ.டி. குமார், சரவணன், சேகர், அருள் தாஸ் ஆகியவர்கள் கலந்து கொண்டு கும்மிடிபூண்டி கிழக்கு ஒன்றியத்தில் வீடு வீடாகச் முன்று புதிய உறுப்பினர்களைச் சேர்த்தனர்.



திருச்சி மாவட்டம் லால்குடி அருகே விரகாலூரில் நடைபெற்ற ஸ்டேன்ஸ் சுவாமி சிலை திறப்பு விழா, மற்றும் சனநாயக எழுச்சி மாநாட்டினை பள்ளி கல்விக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்தார்.தொடர்ந்து ஸ்டேன் சுவாமி சிலையை கழக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி மற்றும் சிதம்பரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன் ஆகியோர் திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாநில செயலாளர் முத்தரசன், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் சண்முகம், தவத்திரு திருடிக்குடில் சுவாமிகள், திராவிடர் விடுதலைக் கழக தலைவர் கொளத்தூர் மணி, கிறிஸ்தவ நல்லெண்ண இயக்க தலைவர், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், லால்குடி சட்டமன்ற உறுப்பினர் சௌந்தரபாண்டியன், காங்கிரஸ் கட்சி திருச்சி வேலுச்சாமி, திருச்சி மத்திய மாவட்டக் கழக செயலாளர் வைரமணி,இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மாநில பொதுச் செயலாளர் முஹமது அபூபக்கர் உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

ஆனந்த முருகன் இளங்கோ நிகழ்ச்சி ஏற்பாட்டில்!

முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள்! மாபெரும் கிரிக்கெட் போட்டி!

அமைச்சர் மா. சுப்பிரமணியன், க.தனசேகரன், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா சிறப்புரை!

சென்னை, ஜூலை 6 முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம் கலைஞர் நகரில் 28 அணிகள் கலந்து கொள்ளும் மாபெரும் கிரிக்கெட் போட்டி இன்று 06.07. 2025 ஞாயிற்றுக் கிழமை தாய் சத்யா பள்ளி மைதானத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு கலைஞர் நகர் தெற்கு பகுதி பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ஆனந்த முருகன் இளங்கோ தலைமையேற்று நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை செய்துள்ளார்.

போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு மாண்பு மிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் மா. சுப்பிரமணியன், முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, தலைமை செயற்குழு உறுப்பினர் சென்னை பெருநகர மாநகராட்சி நிலைக் குழு கணக்கு மற்றும் தணிக்கை தலைவர் க. தனசேகரன் எம். சி. விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏஎம் வி.பிரபாகர ராஜா கலைஞர் நகர் பகுதி செயலாளர்கள் கே.கண்ணன் மு. இராசா ஆகியோர் கலந்து கொண்டு பரிசுகளை வழங்குகின்றனர்.

அய்யாவு பழனி கா. இளங்கோ போஸ் பழனியப்பன் உமாபதி முன்னில வைக்கின்றனர்.

பழக்கடை ஆர். பழனிசாமி இரா. சங்கர் மருதுராம் அபிஷேக் சோழ ரவி, மு.பால்சாமி ஏ.ராஜேந்திரன் அருண்குமார் சுகந்தி கார்த்திக் மணவாளன் முரளி கோகுல் கணேஷ் கோபிநாத் முரளி கண்ணன் யோகேஷ் சுந்தரி வேல். வளையாபதி தில்லா முகம்மது அண்ணாதுரை ராஜ்குமார் சொக்கலிங்கம் ரசூல் கான் தமிழ்ச் செல்வன் சரவணன் ஆர்ட்ஸ் அசோக்குமார் மயில்வாகனன் சக்திவீரன் கா பாஸ்கரன் எம் பி எம் சரவணன் மகேஸ்வரன் ஈ. கார்த்திக், டி. எஸ். பி. தெனனரசு ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

மேலும் இந்நிகழ்ச்சியில் கவிஞர் காசி முத்துமாணிக்கம் வே.உமாகாந்த் கே.குமரேசன் உ.துரைராஜ் பி. எஸ்.முருகேசன் எஸ்.டி.தங்கராசன் வாசுகி பாண்டியன் கனிமொழி தனசேகரன் எஸ். உமாபதி அஜந்தா ரவி தியாகு பாபு ராஜ் செழியன் செந்தில்குமார் பி. கே.குமார் வழக்கறிஞர் எஸ். சதீஷ்கண்ணன் கதிரேசன் ஜம்புமுருகன்

கோயம்பேடு பொன். லோகு ரத்னா லோகேஸ்வரன் நிலவரசி துரைராஜ் த. அரங்கநாதன் ஆர்.சசிகுமார் நிஷா சையத் வாட்டர் எஸ். விஜயகுமார் ச. நாகராஜன் பி விஜயலட்சுமி டு ரஞ்சித் குமார் எஸ் மைக்கேல் மு கோவிந்தராஜன் வி ஏ ராஜா எஸ் பாஸ்கரன் ஆர் பாபு மற்றும் மாவட்ட கழக பகுதி கழக வட்டக் கழக நிர்வாகிகள் கழக சார்பாணிகளின் அமைப்பாளர்கள் துறை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பிக்கின்றனர்.

கௌதம் ராஜா விஜயகுமார் தீபக் நரேஷ் குமார் லட்சுமி நாராயணன் கிஷோர் குமார் வெங்கடேஷ் பாலாஜி ஆகியோர் நன்றி உரையாற்றுகின்றனர்.

"ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்க்கை திட்டத்தின் கீழ் ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, கண்டோன்மெண்ட் பல்லாவரம், நரிக்குறவர் குடியிருப்புக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சென்று நரிக்குறவர் வீடுகளில் ஸ்டிக்கர் ஒட்டி, நரிக்குறவர் குடும்பத்தினரை உறுப்பினராக சேர்த்தார்.